**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PATTUKKOTTAI**

| | |
|---|---|
| Case Number | CC No. 57/2026 |
| Deposition of witness | PW- 2 /LW- 2 |
| Name | திரு. சிவக்குமார் |
| Father's/Husband Name | திரு. கந்தசாமி |
| Village | விக்ரமம் |
| Taluk | பட்டுக்கோட்டை |
| Age | 62/2026 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 25th day of May 2026**

**(சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் எடுப்பதற்கு நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட நீதிமன்ற அலுவலர் செல்வி.கு.பரமேஸ்வரி, bench clerk Gr-3 என்பவரால் சாட்சியிடம் சத்தியபிராமாணம் எடுக்கப்பட்டது)**
**(சாட்சியை நீதிமன்ற காவலர் திரு.வீரப்பிரகாஷ் GR-I 1990 என்பவர் அடையாளம் காட்டி நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டார்)**
**முதல் விசாரணை**

நான் தற்போது மதுக்கூர் பஸ் ஸ்டாப் அருகே Health Center வைத்து நடத்தி வருகிறேன். என் மனைவிக்கு உடம்பு சரியில்லாததால் TMCH ல் சிகிச்சைக்காக சேர்த்திருந்தோம். கடந்த 07.12.2025 எங்கள் வீட்டில் உள்ள அனைவரும் என் மனைவியுடன் மருத்துவமனையில் இருந்தோம். அன்றைய தினம் என் மகன் வீட்டை பூட்டி சாவியை வெளியில் உள்ள சோபா அடியில் வைத்துவிட்டு வந்தார். மறுநாள் 8ம் தேதி காலை 09.00 மணிக்கு வீட்டை வந்து என் மகன் பார்த்த போது வீட்டின் Side door திறந்த நிலையில் இருந்ததாகவும், வீட்டிற்குள் சென்று பார்த்தபோது வீட்டிற்குள் அனைத்து கதவுகளும் திறந்து கிடந்ததாகவும், வீட்டினுள் எல்லா பொருட்களும் கலைந்தும், என் மகனின் Dell Laptop காணாமல் போயிருந்தது. என் மனைவியின் தாலிகயிற்றில் இருந்த குண்டு, காசு ஆகியவை காணாமல் போயிருந்தது. உடனே என் மகன் போன் மூலம் எனக்கு தகவல் தெரிவித்தான்.நான் போலிஸிற்கு போன் செய்தேன். அப்போது போலிஸ் வந்து விசாரணை செய்தார்கள். அன்றே சுமார் 01.00 மணியளவில் தடயவியல்

ஆய்வாளர்களும் வந்து விசாரணை செய்தார்கள். பின்பு போலிஸார் எதிரிகளை கைது செய்து திருடுபோன என் மகனின் Laptop ஐ கண்டுபிடித்துவிட்டதாகவும், சொன்னார்கள். அதன்பேரில் கிறிஸ்துமஸ் அன்று நான் கா.நி சென்றேன். அங்கு ஆஜர் எதிரிகள் இருவரும் கா.நி ல் இருந்தார்கள். இவர்கள்தான் என் மகனின் Laptop ஐ திருடியதாக போலிஸார் சொன்னதன் பேரில் தெரிந்துகொண்டேன். போலிஸார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

போலிஸார் சொன்னதன் பேரில் தான் எதிரிகள் என் வீட்டில் உள்ள Laptop ஐ திருடினார்கள் என்று எனக்கு தெரியும் என்றால் சரிதான். எதிரிகள் என் வீட்டில் திருடியதை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான்.

**மறு விசாரணை இல்லை**

மேற்கண்ட சாட்சியமானது திறந்த நீதிமன்றத்தில் சாட்சியானவர் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து / படிக்க கேட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையெழுத்து / கைரேகை செய்யப்பட்டது.

ஓம்/- திரு.த.சுதர்சன் M.A.,L.L.B.,
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
பட்டுக்கோட்டை